வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 5371/ஆ4/2025 நாள்: 20.01.2026

பொருள் : தேர்வுகள் –வேலூர் மாவட்டம் –தமிழ்நாடு ஊரகப்பகுதி திறனாய்வுத் தேர்வு(TRUST EXAMINATION) –நவம்பர் 2025 –06.12.2025 – தேர்வுகள் நடைபெற்றமை –தேர்வுகள் முடிவுகள் –அரசுத் தேர்வுகள் இணையதளத்தில் வெளியிடப்பட்டது –பள்ளிகளுக்கு தெரிவித்தல் –தொடபர்க

பார்வை : அரசு தேர்வுகள் இயக்குநரின் செய்திக்குறிப்பு நாள் 20.01.2026

==========

பார்வையில் காணும் சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செய்திக்குறிப்பின் படி ஒன்பதாம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு தமிழ்நாடு ஊரகத் திறனாய்வுத் தேர்வு அரசு தேர்வு இயக்ககத்தால் 06.12.2025 (சனிக்கிழமை) அன்று நடைபெற்றது.

இத்தேர்வினை வேலூர் மாவட்டத்தில் மொத்தம் 2350 மாணாக்கர்கள் எழுதியுள்ளனர். தற்போது தேர்வெழுதிய மாணக்கர்களின் மதிப்பெண் விவரங்கள் அரசுத் தேர்வுகள் இயக்கக www.dge.tn.gov.in → Results என்ற இணையதளத்தில் 20.01.2026 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், மாணவர் விவரங்களாகிய பெயரில் உள்ள எழுத்துக்கள், பிறந்த தேதி, பாலினம் ஆகியவற்றில் திருத்தங்கள் ஏதேனும் இருப்பின் உரிய ஆதாரங்களுடன் தேர்வு கூட நுழைவுச் சீட்டினை இணைத்து வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக ஆ4 பிரிவில் ஒப்படைக்குமாறும் ஒரு பிரதியினை சென்னை அரசுத் தேர்வுகள் இயக்கக dgedsection@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 27.01.2026 –க்குள் அனுப்பிட சார்ந்த ஊரக பகுதி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு : பார்வை கடித நகல்

//ஓம். //
முதன்மைக்கல்விஅலுவலர்,
வேலூர்

பெறுநர்:
சார்ந்த ஊரக பகுதி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள்,வே.மா.
நகல்

- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை)அவர்களுக்கு தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுபிவைக்கப்படுகிறது.
- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்(தனியார் பள்ளிகள் /தொடக்கக்கல்வி) அவர்களுக்கு தகவலின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.